LIBRARY
12 OCT 2011
Eastern University, Sri Lanka

# Eastern University, Sri Lanka

## Faculty of Commerce and Management

## External Degree

## Part III Examination in Business Administration -2007/2008 (May / June 2011)

## (Proper)

## EXB 401(a) Auditing

ஏதாயினும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக. நேரம் : 02 மணித்தியாலங்கள்

---

1) கணக்காய்வாளர், கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு உதவக்கூடிய முக்கிய விடயங்களை அளிக்கும் சான்றுகளையும் கணக்காய்வு நியமங்களிற்கு ஏற்ப கணக்காய்வை மேற்கொண்டமைக்கான சான்றுகளையும் ஆவணப்படுத்தல் வேண்டும் என இலங்கை கணக்காய்வு நியமம் (SLAUS230) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ) ஆவணப்படுத்தல் (Documentation) என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது என்ன?

(05 புள்ளிகள்)

ஆ) கணக்காய்வு வேலைத்தாள்களின் மூன்று பிரதான தொழிற்பாடுகளை நிரற்படுத்துக.

(03 புள்ளிகள்)

இ) கணக்காய்வு வேலைத்தாள்களின் வடிவம் உள்ளடக்கம் என்பவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் எவை?

(05 புள்ளிகள்)

ஈ) வழமையில் வேலைத்தாள்களில் அடங்கும் தகவல்கள் ஆவணங்கள் எவை?

(05 புள்ளிகள்)

உ) கம்பனியின் நிரந்தர கணக்காய்வு கோவையில்(Permanent Audit File) வழமையில் வைத்துக்கொள்ளப்படும் ஏழு (07) தகவல்களை நிரல்படுத்துக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

2) "கணக்காய்வாளர் கணக்காய்வு அபிப்பிராயத்தை பெறுவதற்காக நியாயமான அடிப்படையை அடையும் பொருட்டு போதுமானதும் பொருத்தமானதுமான (Sufficient

appropriate) கணக்காய்வு சான்றுகளைப் பெறல் வேண்டும் என இலங்கை கணக்காய்வு நியமம் (SLAuS500) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ) கணக்காய்வு சான்று என்பதன் கருத்து என்ன? (06 புள்ளிகள்)

ஆ) கணக்காய்வின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றின் நம்பகத்தன்மையை (reliability) மதிப்பீடு செய்யும் போது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஐந்து (05) விடயங்கள் எவை?

(06 புள்ளிகள்)

இ) கணக்காய்வு சான்றின் போதுமானதும் பொருத்தமானதுமான தன்மை பற்றி கணக்காய்வாளரின் நியாயத்தீர்ப்பில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை?

(06 புள்ளிகள்)

ஈ) கணக்காய்வு சான்றினை பெற்றுக்கொள்ளும் நடைமுறைகள் எவை?

(07 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

உள்ளக கணக்காய்வு முகாமையால் ஸ்தாபிக்கப்படும் அதேவேளையில் புறக்கணக்காய்வானது உரிமையாளர்களினால் அல்லது பங்குதாரர்களால் ஸ்தாபிக்கப்படுவதாகும்.

அ) உள்ளக கணக்காய்விற்கும் ,புறக்கணக்காய்விற்கும் இடையேயான மூன்று வேறுபாடுகளையும் மூன்று ஒற்றுமைகளையும் நிரற்படுத்துமாறு வேண்டப்படுகின்றீர்.

(06 புள்ளிகள்)

ஆ) உள்ளக கணக்கரய்வாளரின் ஆறு (06) கடமைகளை நிரற்படுத்துக.

(06 புள்ளிகள்)

இ) கணக்காய்வு அறிக்கையின் அடிப்படை மூலகங்களை (Basic Elements) நிரல்படுத்துக.

(04 புள்ளிகள்)

ஈ) கணக்காய்வு நிகழ்ச்சி திட்டம் என்றால் என்ன? கணக்காய்வு நிகழ்ச்சி திட்டத்தின்(Audit Programme) நன்மை தீமைகள் எவை?

(04 புள்ளிகள்)

உ) கணக்காய்வு வேலைக்கு ஈடுபடுத்தல் கடிதத்தின் (Audit Engagement Letter) பிரதான உள்ளடக்கங்கள் எவை?

(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

அ) சொத்துக்களை மெய்மையாய்வு செய்யும்போது பின்பற்ற வேண்டிய அம்சங்கள் எவை?

(07 புள்ளிகள்)

ஆ) பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கணக்குகளில் காட்டப்பட்ட பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக கணக்காய்வாளர் என்ற வகையில் நீர் எவ்வாறு இவற்றை மெய்மையாய்வு செய்வீர்?

| | | ரூபா |
|---|---|---|
| I) | மோட்டார் வாகனங்கள் | 1 மில்லியன் |
| II) | முதலீடுகள் | 5 மில்லியன் |
| III) | வங்கியில் உள்ள மீதியும் காசு மீதியும் | 0.72 மில்லியன் |
| IV) | நீண்டகால பொறுப்புக்கள் | 1.25 மில்லியன் |

(08 புள்ளிகள்)

இ) பின்வரும் சோடிப் பதங்களுக்கிடையேயான அடிப்படை வேறுபாடுகளை சுருக்கமாக விளக்குக.

i) அகக் கட்டுப்பாடும் அகச் செவ்வையும் (Internal Control and Internal Check)

ii) மோசடியும் வழுக்களும (Fraud and Error)

iii) நேரடியானதும் எதிர்மறையானதுமான உறுதிப்படுத்தல்கள்

iv) கணக்காய்வு நியமங்களும் கணக்காய்வு நடைமுறைகளும் (Auditing standards and Audit procedure)

v) பிரதிநிதித்துவக் கடிதமும் பலவீனக் கடிதமும்.(உள்ளகக் கட்டுப்பாட்டு கடிதம்) (Letter of representation and letter of weaknesses)

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

அ) செலவினக் கண்க்காய்வு (Expenditure Audit) அல்லது சான்று உறுதியிடல் கணக்காய்வு (Vouching Audit) என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

ஆ) பகுப்பாய்வு நடைமுறைகளின் தன்மை(Nature) மற்றும் நோக்கம்(Purpose) என்பவற்றை குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

இ) இலங்கை அரசில் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகள் அதிகாரங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் பற்றி விளக்குக.

(08 புள்ளிகள்)

ஈ) பாதகமான அபிப்பிராயம் (Adverse opinion) மற்றும் கருத்துரிமை மறுப்பு அபிப்பிராயம்(Disclaimer of opinion) என்ற பதங்களினால் நீர் விளங்கிக் கொள்வது என்ன என்பதனைத் தருவதுடன் இவை ஒவ்வொன்றிற்கும் உதாரணம் தருக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 25புள்ளிகள்)